# ஷேர் ஆட்டோ, கார் கட்டணம் ரூ.5 குறைப்பு: மெட்ரோ ரயில்வே நிர்வாகம் அறிவிப்பு

சென்னை, நவ. 11: ஷேர் ஆட்டோ, கார் சேவையை பயணிகள் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தும் வகையில், இவற்றுக்கான கட்டணத்தில் ரூ.5 குறைக்கப்படுகிறது என்று மெட்ரோ ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னையில் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகளுக்கான போக்குவரத்து இணைப்பை மேலும் எளிமையாக்கும் வகையில், ஷேர் ஆட்டோ, கார்களை பயன்படுத்தும் 'ஷேர் டிரிப்' முறை ஆகஸ்ட் 11 -ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. 8 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ சேவையும், 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து கார் சேவையும் வழங்கப்படுகிறது.

மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் உள்ள இடங்களுக்கு ஷேர் ஆட்டோக்கள், கார்கள் இயக்கப்படுகின்றன. இதுதொடர்பாக மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது:



ஷேர் ஆட்டோ, கார் சேவையை பயன்படுத்துவோரை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக, கார் சேவைக்கான கட்டணம் ரூ.15-இல் இருந்து ரூ.10 ஆகவும்,, ஷேர் ஆட்டோ கட்டணம் ரூ.10 இல் இருந்து ரூ.5 ஆகவும் குறைக்கப்படுகிறது. இந்த கட்டணக் குறைப்பு திங்கள்கிழமை (நவ.12) முதல் அமலுக்கு வருகிறது என்றார் அவர்.